OS 203/2017

வா.சா. 1 திருநீலகண்டன் த/பெ நடராஜன்

நாள் 10.03.2025

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

13. வா.சா.ஆ1 அடமான கடன் பத்திரத்தில் காட்டப்பட்டுள்ள சொத்து 10.01.2007 ல் எனக்கும் பிரதிவாதிக்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட கிரைய ஒப்பந்த சொத்தும் ஒரே சொத்துக்கள் என்றால் சரிதான். ஆனால் அவை வெவ்வேறு ஆவணங்கள் ஆகும்.

14. 10.01.2007 ல் ஏற்படுத்தப்பட்ட கிரைய ஒப்பந்தத்தில் ரூ.3,00,000/- முன்தொகையாக கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு கொடுக்கப்பட்ட ரூ.3,00,000/- ஆறு காசோலைகளாக தலா ரூ.50,000/-க்கு என்னால் பிரதிவாதியிடம் கொடுக்கப்பட்டு அந்த காசோலைகள் வங்கியில் வசூலுக்காக போடப்பட்டு பணம் பிரதிவாதியால் பெறப்பட்டது என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தம் பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். நான் அந்த ஆவணத்தின் பேரில் எந்த சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

15. வா.சா.ஆ1 அடமான கடன் பத்திரத்திற்கு நான் பிரதிவாதிக்கு பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. ரொக்கமாக ரூ.3,50,000/- கொடுத்தேன். கிரைய ஒப்பந்தத்திற்காக கொடுக்கப்பட்ட ரூ.3,00,000/- மற்றும் அதற்கான வட்டி கணக்கிடப்பட்டு பி.வா.சா.ஆ1 முன்னிலைக்கு அடமான கடன் பத்திரம் ரூ.3,50,000/-ற்கு என்னால் தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

16. பி.வா.சா.ஆ1 ஆவணத்தின் குறிப்பிடப்பட்டுள்ள 10.01.2007 தேதியும் கிரைய ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 10.01.2007 தேதியும் ஒரே தேதி என்றால் அசல் ஆவணத்தை பார்த்தால் தான் சொல்ல முடியும். பி.வா.சா.ஆ1 அசல் ஆவணம் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை.

17. 10.01.2007 தேதியிட்ட கிரைய ஒப்பந்த அசல் ஆவணம் என்னிடம் உள்ளதா என்றும் அந்த அசல் ஆவணத்தை என்னால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் அது என் மனைவியை கேட்டு தான் சொல்ல வேண்டும். என் மனைவி தான் அவற்றை பராமரித்து வருகிறார். அவ்வாறு அசல் கிரைய ஒப்பந்தத்தை என் வீட்டில் தேடி அடுத்த வாய்தாவில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் தேடி கிடைத்தால் தாக்கல் செய்கிறேன். எனக்கு ரூ.3,50,000/- கொடுத்தால் அசல் ஆவணத்தை கொடுத்துவிட்டு மேலும் அந்த கிரைய ஒப்பந்தத்தை ரத்து செய்து தரவும் தயாராக உள்ளேன்.

18. 10.01.2007 தேதியிட்ட கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் பிரதிவாதி மீது நான் ஏன் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் பிரதிவாதி பணம் கொடுத்துவிடுவதாக சொன்னார். அதனை நம்பி நான் கிரைய ஒப்பந்தத்தின் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமல் விட்டுவிட்டேன். நான் 10.01.2007 தேதியிட்ட கிரைய ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தின் மீது தான் கவனம் செலுத்தினேன் என்றும் ஆனால் பிரதிவாதி முன்தொகையை திருப்பி தர தயாராக இருந்தார் என்றும் அந்த காரணத்திற்காக தான் 10.01.2007 தேதியிட்ட கிரைய ஒப்பந்தம் மேல்நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாமல் விட்டுவிடபட்டது என்று சொன்னால் சரியல்ல.

19. 10.01.2007 தேதியிட்ட கிரைய ஒப்பந்த தொகையின் வட்டி சம்மந்தமாக நான் பிரதிவாதியின் மனைவியின் பெயரில் இருந்த டாடா வேன் ரூ.4,00,000/- மதிப்புடைய வாகனத்தை நான் எடுத்துக்கொண்டேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ1 அடமானம் சுவாதீனம் அடமானம் அல்ல என்றும் வட்டிக்காக ஏற்படுத்தப்பட்ட அடமானம் என்றால் சரிதான்.

20. வா.சா.ஆ1 அடமானம் சொத்தில் அத்துமீறி நுழைந்து மூங்கில் வியாபாரிக்கு வாடகைக்கு விட்டு அந்த வாடகை பணத்தை வட்டிக்காக கழித்து கொண்டேன் என்றால் சரியல்ல. அதற்குரிய ஆவணம் எதுவும் உள்ளதா யாரோ வாடகைக்கு இருந்தால் நான் பொறுப்பாக முடியாது. இது சம்மந்தமாக ஆரணி நகர காவல் நிலையத்தில் பிரதிவாதி புகார் கொடுத்து என்னை விசாரணைக்காக அழைத்தார்கள் என்றால் என் மீது புகார் கொடுக்கவில்லை மூங்கில் வியாபாரி ஐம்புலிங்கம் என்பவர் மீது புகார் கொடுக்கப்பட்டு விசாரணைக்காக அழைக்கப்பட்டார். அவ்வாறு விசாரணையின் போது காலி செய்யாமல் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னதன் அடிப்படையில் தான் மூங்கில் வியாபாரி காலி செய்தார் என்றால் சரியல்ல.
(வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.)